**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.MCOP. 96 /2018**

**Deposition of P.W.1- றூபி ஹெலன்**

**Dated: 14.03.2025**

2**வது எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை. விபத்து தொடர்பாக நான் புகார் மனு கொடுக்கவில்லை. இறந்து போனவர் எனது தாயார். எனது தாயார் குட்டியாணை வாகனத்தில் பயணம் செய்தார். அந்த வாகன எண்.TN 74 H 2713 என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. எனது தாயார் சின்ன முட்டத்திலிருந்து மீன் வாங்கி விட்டு அந்த வாகனத்தில் வந்தார். எனது தாயாருடன் மேலும் 2 நபர்கள் இருந்தார்கள். எனது தாயார் வாகனத்தின் பின்னால் லோடு மீது அமர்ந்து வந்தார் என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கை மற்றும் குற்ற இறுதி அறிக்கையில் வாகனத்தின் பின்னால் லோடு மீது அமர்ந்து வந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாகனம் வேறு எதிலும் மோதவில்லை. வாகனம் விபத்தில் ஈடுபடவில்லை. விபத்து காலை 04.00 மணிக்கு நடைபெற்றது. விபத்து தெருவூர்கடை என்ற பகுதியில் வைத்து விபத்து நடைபெற்றது. எனது தாயார் தூங்கி கொண்டிருந்த படியால் வாகனத்திலிருந்து கீழே விழுந்து விட்டார் என்றால் சரியல்ல. எனது தாயாரின் கவனக்குறைவினால் தவறி விழுந்து விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. சரக்கு வாகனங்களில் பயணிகள் பயணம் செய்வதற்கு அனுமதி இல்லை என்றால் சரியல்ல. ஓட்டுனருக்கு மட்டும் தான் பயணம் செய்ய அனுமதி உள்ளது என்றும், மற்ற நபர்கள் அந்த வாகனத்தில் பயணிக்க கூடாது என்றால் சரியல்ல. எனது தாயர் சட்ட விரோதமாக லோடு மீது அமர்ந்து பயணம் செய்தார் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு விதிமுறைகளுக்கு எதிராக

சரக்கு வாகனத்தில் பயணிகளை ஏற்றி சென்றார் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு விதிமுறைகளை மீறியதால் 2வது எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க வேண்டியதில்லை என்றால் சரியல்ல. நாங்கள் 1ம் எதிர்மனுதாரரிடம் தான் இழப்பீடுகோர முடியும் என்றால் சரியல்ல. விபத்து சமயம் 1ம் எதிர்மனுதாரருக்கு முறையான ஓட்டுனர் உரிமம் இல்லை என்றால் சரியல்ல. மனுதாரர்கள் திருமணமாகி தனித்தனியே வசித்து வருகிறோம் என்றால் சரிதான். எனது தயாரை சார்ந்து நாங்கள் யாரும் இல்லை என்றால் சரியல்ல. எனது தாயாரின் இறப்பிற்கு அதிக இழப்பீடு கேட்க உரிமையில்லை என்றால் சரியல்ல. 2வது எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்படம் என்றால் சரியல்ல.